IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO. 141/2022

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | GOPI |
| FATHER'S NAME | : | SADHASIVAM |
| VILLAGE | : | ARUMAPARUTHI |
| OCCUPATION | : | SECURITY |
| AGE | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 21st day of March 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் அரும்பருத்தி கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் செக்யூரிட்டி வேலை செய்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2 வது கையொப்பங்கள் என்னுடையது தான். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலை செய்து கொண்டிருந்த அம்பாலால் குடியிருப்பில் ஒருவர் காரை வேகமாக ஓட்டி அதனால் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக போலிசார் மேற்படி கையொப்பங்களை என்னிடம் பெற்றார். என்னுடன் சேர்ந்து யார் கையொப்பம் போட்டார்கள் என்பது தெரியவில்லை. போலிசார் விசாரணை செய்தார்கள். ஆனால் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னையும் விசாரணை செய்தார்கள். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மொத்தமாக நான்கு ஆண்டுகள் அம்பாலால் குடியிருப்பில் வேலை செய்தேன். 1 ஆம் எதிரி துரைசாமியை தெரியும். மற்ற எதிரிகளான தட்சிணாமூர்த்தி மற்றும் கணேஷ் இருவரையும் தெரியும் அவர்கள் இருவரும் அந்த குடியிருப்பில் வசித்து வந்தார்கள். இந்த வழக்கின் புகார்தாரர் யார் என்றால் பாரி என்பவர் ஆவார். அவரும் மேற்படி குடியிருப்பில் வசித்து வந்தார் என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏதேனும் முன்விரோதம் இருந்ததா என்றால் அவ்வாறு எனக்கு தெரியவில்லை. நான் முதல் விசாரணையில் ஒருவர் கார் வேகமாக ஓட்டி வந்ததால்

பிரச்சனை ஏற்பட்டது என கூறியுள்ள நிலையில் அந்த ஒருவர் யார் என்றால் அவர் புகார்தாரர் பாரி ஆவார். அதன் காரணமாக தான் எதிரிகளுடன் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனையை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 2 ஆம் எதிரி தட்சிணாமூர்த்தி வீட்டிற்கும் புகார்தாரர் பாரி வீட்டிற்கும் இடையே கண்காணிப்பு கேமரா உள்ளது. நான் எழுதாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 21.03.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

ஒம்/- ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.